ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2412/36 - 2024 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2024.11.29

2412/36 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

பிரிவு 21 மற்றும் 139 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) அ பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அமைச்சர் ஹரிணி அமரசூரிய ஆகிய நான், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டுசொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாக கருதப்படுகின்ற இலஙகை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும்) 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 1469/ 38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான, கட்டளைக்கான அட்டவணையின் அதன் நிரல் I இல் காணப்படுகின்றதும், 2020 பெப்புருவரி 19 ஆம் திகதிய 2163/ 22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதுமான "மருத்துவ பீடம்" என்னும் விடயத்துடன் தொடர்புபடும் அட்டவணைக்குரிய நிரல் II இல் தோன்றும் விடய இலக்கம் "06. சமூக மருத்துவம் மற்றும் குடும்ப மருத்துவ திணைக்களம்" என்பதற்கு பதிலாக பின்வரும் உள்ளீட்டை மாற்றுவதன் மூலம் :

"6. பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப மருத்துவ திணைக்களம்"

**ஹரிணி அமரசூரிய,**
கல்வி, விஞ்ஞானம் மற்றும்
தொழினுட்ப அமைச்சர்.

கொழும்பு,
2024, நவெம்பர் 13.

EOG11 - 0188

1A - PG6928 – 454 (2024/11)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*